அசல் வழக்கு எண். 244/2018 தேதி 14-02-2024

வா.சா.1 – ரவிச்சந்திரன்

**2. 3 5 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எனது சொத்தின் சர்வே எண்.77 ஆகும். பிரதிவாதிகள் சொத்தின் சர்வே எண்.75 ஆகும். வா.சா.ஆ.4 கிரைய பத்திரத்திற்கு பின்னர் தாவா B அட்டவனை பாதை வழியாக தாவா A அட்டவணை சொத்திற்கு சென்று வருவதாக சொல்வது முற்றிலும் தவறு என்றால் சரியல்ல . 26.06.1990 ம் தேதி கிரையத்திற்குபின்னர் தாவா B அட்டவனை சொத்தை பாதையாக பயன்படுத்தி வருவதால் எனக்கு வசதி உரிமை ஏற்பட்டுள்ளதாக கூறுவது தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ-4 கிரைய பத்திரம் பக்கம் 10 ல் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு மேற்படி பாதை பாத்தியம் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 பிராது வரைபடத்தில் தாவா பாதை என குறிப்பிட்டுள்ள இடம் சர்வே எண் 75 ல் கட்டுப்பட்டதாகும்.

2. சர்வே எண் 75 ல் உள்ள சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்கள் 75 மற்றும் 77 ஆகியவை ஆதியில் சங்கப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டு இருந்ததாகும். A பட்டியல் சொத்தை அடைவதற்கு எனக்கு வேறு பாதைகள் உள்ளது என்றும், அதனை மறைத்து தாவா B பட்டியல் பாதை மட்டும் A பட்டியல் சொத்திற்கு செல்லக்கூடியது என பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சர்வே எண்ணிற்கான புல வரைபடத்தில் தாவா A பட்டியல் சொத்திறகு செல்வதற்கு பல பாதைகள் உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தும் வகையில் B பட்டியல் சொத்தில் மட்டும் பாதை உள்ளதாக தவறாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

3. தாவா A அட்டவணை சொத்திற்கு செல்ல தாவாB பட்டியல் சொத்து பாதை என சொல்வது தவறானது என்றால் சரியல்ல. தாவா B அட்டவணை சொத்தை பொறுத்து நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கக் கூடியது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ 5 மற்றும் வா.சா-ஆ.6 ஆவணங்கள் இவ்வழக்கிற்கு சம்மந்தப்பட்டது இல்லை என்றால் சரியல்ல. என் தந்தை தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.282/2013 வழக்கில் நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டார். அதில் ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல்

செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தில் தாவா சொத்திற்கு செல்வதற்கு வேறு பாதை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதால் மீண்டும் இவ்வழக்கில் ஆணையர் நியமனம் கோரினேன் என்றால் சரியல்ல.

4. அசல் வழக்கு எண்.282/2013 வழக்கை திரும்ப பெற்று கொண்டு முறையான சட்ட விதிகளை கடைப்பிடிக்காமல் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.282/2013 வழக்கை அதே வழக்கு மூலத்திற்கு மீண்டும் தாக்கல் செய்ய நீதிமன்றத்தில் அனுமதி பெற்று திரும்ப பெறவில்லை என்றால் சரியல்ல. எனது உடன் பிறந்தவர்களை தரப்பினர்களாக சேர்த்து இவ்வழக்கு தாக்கல் செய்யாததால் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கு சொந்தமாக டிராக்டர் உள்ளதா என்றால் இல்லை. 07.12.2013 முதல் 09.12.2013 ஆகிய தேதிகளில் தாவா B பட்டியல் சொத்தில் நானும், எனது டிரைவர் அருண்குமார் மற்றும் சிலரும் சேர்ந்து வண்டிப்பாதையாக மாற்ற முயற்சி செய்தோம் என்றால் சரியல்ல.

5. மேற்படி எங்களது செயல்களை பிரதிவாதிகளால் புகைப்படம் எடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா B பட்டியல் சொத்தான சர்வே எண்.75 என்பது 09.05.1977, 26.04.1977, 07.07.1981, 17.03.1984 ஆகிய தேதிகளில் ஏற்பட்ட கிரைய பத்திரங்கள் மூலமாக பிரதிவாதிகள் மற்றும் அவரது வாரிசுகளுக்கு மட்டும் பாத்தியம் என்றும், எனக்கும் என் உடன் பிறந்தவர்களுக்கும் மேற்படி சொத்தில் எவ்வித பாத்தியமும் கிடையாது என்றால் சரியல்ல. எந்த கிரைய பத்திரங்களிலும் தாவா B பட்டியல் சொத்து வண்டிப்பாதை என குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கக்கூடியது இல்லை என்றும், தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**